[2005 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 192, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

192—

தரிசு நில மேம்பாடு

***18915—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதியில் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அவினாசி தொகுதியில் விரிவான தரிசு நிலத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு சேர்க்கப்படவில்லை. (ஆ) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அடுத்த நிதியாண்டில் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளது.

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்—C.R.P.F.—மத்திய ரிசர்வ் காவல் படையில் பணியாற்றியவன். அகிலம் போற்றும் மாண்புமிகு அன்னை அவர்கள், உலகிலேயே சிறந்த காவல் துறையாக விளங்கிக்கொண்டிருக்கிற தமிழ்நாடு காவல் துறைக்கு மகத்தான முத்து முத்தான 36 திட்டங்களை அறிவித்து நவீனமயமாக்கியுள்ளார்கள். அதேபோல, நல்லவர்கள் மட்டுமா பிள்ளைகள்? நலிந்தவர்களும் பிள்ளைகள் என்று நேற்றையதினம் உடல் ஊனமுற்றோர்கள் மற்றும் பார்வையற்றவர்களுக்கு அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பு மற்றும் உதவித்தொகைகள் என்ற நல்ல பல திட்டங்களை அறிவித்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானு கோடி நன்றியை பாத மலர்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிக் காட்டுவேன் என்ற சூளுரையோடு அல்லும் பகலுமாக அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

2005 மார்ச் 17]

தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து, சீரிய முறையில் செயல்வடிவம் தந்து கொண்டிருக்கிறார்கள். அவினாசி தொகுதி, மொத்தம் 52 ஊராட்சிகள் மற்றும் அவினாசி, அன்னூர், திருமுருகன்பூண்டி ஆகிய 3 சிறப்பு நிலை ஊராட்சிகளைக் கொண்டது. ஆக, அவினாசி தொகுதியில் வாழும் மக்கள் அனைவரும் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். இன்னும் சுமார் 10,185 ஹெக்டேர் நிலங்கள் தரிசு நிலங்களாக உள்ளன. எனவே, அவினாசியில் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டதைப் போன்று, அடுத்த நிதியாண்டில் மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் அவினாசி தொகுதியிலுள்ள இரண்டு ஒன்றியங்கள், விரிவான தரிசு நிலத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2004-2005 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதன் மூலமாக தமிழகத்திலுள்ள அனைத்து தரிசு நிலங்களையும் விளை நிலங்களாக மாற்றி வருகின்ற வேளையில், அவினாசி தொகுதியில் சுமார் 41 ஏக்கர் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றியுள்ளனர். எனவே, நடப்பு நிதியாண்டுகளில் மீதமுள்ள தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றியமைக்க உள்ளது பற்றி அறிவித்தமைக்கு எனது பணிவான நன்றியை புரட்சித் தலைவி அம்மாவின் பொற் பாதங்களிலும், அமைச்சர் அவர்களுக்கும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாட்டு திட்டத்தைப் பொறுத்தவரையிலே (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாட்டு திட்டத்தைப் பொறுத்தவரையிலே சும்மா கிடந்த நிலத்திற்கு, சும்மா கிடந்த தரிசிற்கு இது எங்கள் அம்மா கொடுத்த பரிசு என்று விவசாயிகள் இன்றைக்கு மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

[2005 மார்ச் 17

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களுடைய பதிலை நிறைவு செய்கின்ற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டமான இந்தத் திட்டத்தின்கீழ், சும்மா கிடந்த தரிசிற்கு அம்மா கொடுத்த பரிசின்கீழ், எத்தனை இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் இன்றைக்கு விளை நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன? எத்தனை இலட்சம் விவசாயிகள் இதன் மூலம் இன்றைக்குப் பயன்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய முத்தான திட்டங்களிலே விரிவான தரிசு நிலத் திட்டம் என்பது ஒரு மாபெரும் திட்டம். அந்தத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களாலே 2001 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு தொடர்ந்து வருண பகவான் கருணை காட்டாத காரணமாக இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவுரையின் பேரிலே, ஆணையின் பேரிலே, 2002-2003 ஆம் ஆண்டிலே 21,771 ஹெக்டேர் நிலமும், 2003-2004 ஆம் ஆண்டிலே 23,600 ஹெக்டேர் நிலமும், 2004-2005 ஆம் நிதி ஆண்டிலே 41,141 ஹெக்டேர் நிலமும், விரிவான தரிசு நிலத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு, தரிசு நிலங்களாக இருந்த அந்த விளை நிலங்கள் மூலமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற வேளாண் பெருமக்கள் சாகுபடி செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதையும், அந்த சாகுபடி மூலமாக அந்த நிலங்கள் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததாக அமைந்திருக்கின்றது என்பதையும், அந்தப் பகுதியிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழையெளிய தாய்மார்களுக்கு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய வாய்ப்பு அமைந்திருக்கின்றது என்பதையும், அதோடு சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்பதையும், நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]